**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

அ.வ.எண். 13/2009 28.07.2022

வா.சா.1. ராமா ரெட்டி

வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு என்ன வயது என்றால் 65. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் பள்ளிக்கூடமே போகவில்லை. என் தந்தை பெயர் சின்ன முனுசாமி ரெட்டி என்றால் சரிதான். முதல் பிரதிவாதி முனிரெட்டி என் மூத்த சகோதரர் என்றால் சரிதான். 2வது பிரதிவாதி என்னுடைய தம்பி என்றால் சரிதான். சுப்பம்மா, ரத்தினம்மா, பிரமிளா ஆகியோர் என்னுடைய சகோதரிகள் என்றால் சரிதான். 6ம் பிரதிவாதி நிறுவனம் 1ம் பிரதிவாதியிடம் "ஆ" பட்டியல் இன சொத்துக்களுக்கு குத்தகைதாரராக இருக்கிறார் என்றால் சரிதான், என்னுடைய அண்ணனும் , தந்தையும் சேர்ந்து கொடுத்துள்ளார்கள். என் தந்தை எப்போது காலமானார் என்றால் 2004 ல் காலமானார். என் தந்தை இறந்த பிறகு 6ம் பிரதிவாதி நிறுவனத்திடம் யார் குத்தகை பணம் வாங்குகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், என் அண்ணன் தான் வாங்குகிறார். என்னுடைய அண்ணன் மட்டும் தான் 6ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு குத்தகை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் இல்லை, என் தந்தையும் சேர்ந்து தான் எழுதிக்கொடுத்துள்ளார். 7வது பிரதிவாதி ஜெயராம ரெட்டி யார் என்று கேட்டால் எனக்குத் தெரியாது. 8 முதல் 12 பிரதிவாதிகள் யார் என்றால், ஜெயராம ரெட்டியும் மற்றும் 8 முதல் 12 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 7 முதல் 12 பிரதிவாதிகளுக்கு "ஆ " பட்டியல் இன சொத்துக்களில் எந்தவித உரிமையோ, பாத்தியமோ, சுவாதீனமோ இல்லை என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகளான 3 முதல் 5 பிரதிவாதிகள் அந்த சொத்தில் தங்களுக்கு எந்த வித உரிமையும் இல்லை எனவும், அது அவர்களின் அண்ணனான முதல் பிரதிவாதிக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் அவ்வாறு சொல்லவில்லை. இந்த வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்துள்ளதை நான் என் வழக்கறிஞரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் என்னுடைய தம்பியான 2ம் பிரதிவாதியிடம் நன்றாக பேசிக்கொண்டிருக்கேனா என்றால் ஆமாம், ஆனால் எங்களுக்குள் எந்த தொடர்பும் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இரண்டாம் பிரதிவாதி என்னுடன் வழக்கு தாக்கல் செய்வதற்காக வழக்கறிஞரை வந்து பார்த்தாரா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் யார் சொல்லி நான் எடுத்தேன் என்றால் என் தந்தை இது

போல் சொத்துக்கள் உள்ளது என்று கூறியுள்ளார், அதை வைத்து அந்த ஆவணங்களை ஆவண எழுத்தர் மூலம் எடுத்தேன். அந்த ஆவண எழுத்தர் பெயர் என்னவென்றால் எனக்குத் தெரியாது. அவர் எந்த ஊரில் வசிக்கிறார் என்றால் அதுவும் தெரியாது. எந்த அலுவலகத்தில் அந்த ஆவணங்களை எடுத்தேன் என்றால் சார் பதிவாளர் அலுவலகத்தில் எடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என்னுடைய தம்பியான இரண்டாம் பிரதிவாதி தான் எடுத்துக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல, அவருக்கும்,இதற்கும் சம்பந்தம் இல்லை. எந்த வருடத்தில் இந்த ஆவணங்களை எடுத்தேன் என்றால் எந்த வருடம் என்பது எனக்குத் தெரியவில்லை. வழக்குப் போடுவதற்கு முன்பே இந்த ஆவணங்களை எடுத்தேனா அல்லது வழக்கு போட்டபின்பு எடுத்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எடுத்தேன். நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.26 வரையிலான ஆவணங்களை நான் வழக்கு போடுவதற்கு முன்பே எடுத்தேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எடுத்தேன் என்றாலும், அதற்கு முன்பு எடுக்கவில்லை என்றாலும் அந்த சில ஆவணங்களை 2018 ல் தான் நான் எடுத்தேன் என்பதால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே நான் அனைத்து ஆவணங்களையும் எடுத்தேன் என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தந்தை சின்ன முனுசாமி ரெட்டி எங்கு வசித்து வந்தார் என்றால் எனது ஊரான தேவரயுளிமங்களம் கிராமத்திலுதம் வசித்தார், பெங்களூரில் ஹொங்கசந்திரா கிராமத்திலும் அவருக்கு நிலம் இருந்தது, அங்கும் அவர் வீடு கட்டிகொண்டு வசித்தார், ஒசூரிலும் சில காலம் வசித்தார். இறப்பதற்கு முன்பு சாதாரணமாக அவர் எங்கு வசித்தார் என்றால் இரண்டு இடங்களிலும் வசித்து வந்தார். அவருக்கு வாக்காளர் அடையாள அட்டை எங்கு இருந்தது என்றால் எங்கள் சொந்த ஊரில் இருந்தது. என்னுடைய தந்தை இறப்பதற்கு முன்பு சுமார் 30 வருடங்கள் என் தந்தை என்னுடைய அண்ணனான முதல் பிரதிவாதியின் வீடு உள்ள பெங்களூரில் தான் வசித்து வந்தார் என்றாலும், அந்த வீட்டில் தான் அவருக்கு வாக்காளர் அடையாள அட்டை உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய தம்பியான இரண்டாம் பிரதிவாதியும், முதல் பிரதிவாதி வீட்டில் தான் குடியிருந்து வந்தார் என்றாலும், அங்கு தான் அவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை உள்ளது என்றாலும் சரியல்ல. நல்லூர் கிராமம் எங்கு உள்ளது என்றால் பெத்த எலசகிரி கிராமத்தின் பக்கத்தில், ஒசூர் தாலுகாவில் தான் உள்ளது. நான் தாக்கல் செய்த ”ஆ ” பட்டியல் இன சொத்துக்கள் அந்த கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள நல்லூர் கிராமத்தில் எவ்வளவு விஸ்தீரணம் சொத்துக்கள் உள்ளது என்றால் 11 1/2 ஏக்கர் சொத்து நிலம் உள்ளது. என்னுடைய தந்தை வெவ்வேறு ஊர்களில் நிலம் வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எந்தெந்த ஊர்களில் என் தந்தை நிலம்

வாங்கினார் என்றால், தேவரயுளிமங்களம் கிராமத்தில் வாங்கியுள்ளார், கோட்டுர் கிராமத்தில் வாங்கியுள்ளார். கக்கதாச கிராமத்திலும் வாங்கியுள்ளார். பள்ளப்பள்ளி கிராமத்திலும் வாங்கியுள்ளார். அவர் வாங்கிய சொத்துக்கள் அவ்வளவு தானா என்றால் ஆமாம், ஆனால் அவருக்கு பிதுராஜ்ய சொத்துக்களும் உள்ளது. என்னுடைய தந்தைக்க வேற எந்த ஊரிலும் சொத்துக்கள் இல்லையா என்றால் ஆம் இல்லை தான். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் ஹொங்கசந்திரா கிராமத்தில் நிலம் வாங்கியதாக கூறுகிறேன், அந்த நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்குத் தெரியாது. அதன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் அதுவும் தெரியாது. அந்த சொத்துக்களை என் தந்தை எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு வாங்கினார் என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பள்ளப்பள்ளியில் என் தந்தை சொத்துக்கள் வாங்கியதாக கூறுகிறேன், அந்த சொத்துக்களை இந்த தாவாவில் சேர்த்துள்ளேனா என்றால் சேர்த்துள்ளேன். நான் இந்த வழக்கில் ஹொங்கசந்திரா கிராமத்தில் என் தந்தை வாங்கியதாக நான் கூறுகின்ற சொத்துக்களை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் ஆவணங்கள் கிடைக்கவில்லை, ஆனால் சொல்லியுள்ளேன். நான் அந்த நிலங்களை இந்த தாவாவில் சேர்த்துள்ளேனா என்றால் எனக்குத் தெரியவில்லை. நான் என்னுடைய தாவாவில் என் தந்தை ஹொங்கசந்திரா கிராமத்தில் 06.10.1986 ல் ஒரு ஜெயப்பா ரெட்டியிடம் இருந்து என் தந்தை 0.29.5 குண்டா நிலத்தை சர்வே எண்.91 ஹொங்கசந்திரா கிராமத்தில் வாங்கியதாக கூறியுள்ளேன், ஆனால் அந்த சொத்துக்களை தாவாவில் சேர்க்கப்படாததால் இந்த வழக்கு தள்ளபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வாறு என் தந்தை பல சொத்துக்கள் வாங்கியதற்கு என் தந்தைக்கு எவ்வாறு வருமானம் வந்தது என்றால் , ஊரில் விவசாயம் செய்த வருமானத்தில் வாங்கினார். மேற்படி சொத்துக்களை வாங்குவதற்கு என் தந்தைக்கு எந்த வருமானமும் இல்லை என்றாலும், அவற்றை வாங்குவதற்கு முதல் பிரதிவாதியும், அவருடைய மனைவி சுனந்தாரெட்டியும் தான் பணம் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அண்ணனான முதல் பிரதிவாதி பல ஊர்களில் சொத்து வாங்கியதாக கூறுகிறேன், அவர் எந்தெந்த ஊர்களில் சொத்து வாங்கியுள்ளார் என்றால் அவர் வாங்கிதற்கான சில ஆவணங்கள் மட்டும் உள்ளது, அவற்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, அவருடைய சொத்துக்கள் எதுவும் எனக்கு வேண்டாம். ஹொங்கசந்திரா கிராமத்தில் உள்ள சொத்துக்கள் உண்மையில் என் தந்தை வாங்கியிருந்தால் அந்த நிலங்களைும் நான் தாவாவில் சேர்த்திருப்பேன் என்றால் , அதை என் அண்ணனான முதல் பிரதிவாதி வாங்கிய காரணத்தினால் நான் தாவாவில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் தாக்கல் செய்யவில்லை. நல்லூர் கிராமத்தில் உள்ள சொத்துக்களையும், முதல் பிரதிவாதியும் அவருடைய மனைவி சுனந்தா ரெட்டியும் சேர்ந்து தான் பணம கொடுத்து என் தந்தை பெயரில் வாங்கினாரர்கள் என்றால் சரியல்ல, என் தந்தை தான் பணம் கொடுத்து வாங்கினார். முதல் பிரதிவாதி பெங்களூரில்

சொத்துக்கள் ,கட்டியுள்ள கட்டிடங்களை வாங்கியதாக நான் என் முதல் பிரமாண வாக்கு மூலத்தில் கூறியுள்ள சொத்துக்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு முதல் பிரதிவாதி வாங்கிய சொத்துக்களுக்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முதல் பிரதிவாதி அச்செட்டிப்பள்ளியில் 10 ஏக்கர் நிலம் வாங்கியதாக நான் என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், அதை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதே போல் சாப்பரப்பள்ளி கிராமத்தில் 100 ஏக்கர் நிலம் வாங்கியதாக நான் என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன், அதை நான் பார்க்கவில்லை , என் சகோதரர் வாங்கியதாக அங்குள்ள புரோக்கர்கள் கூறினார்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. நான் என் பிரமாண வாக்குமூலத்தில் இருதுகோட்டையில் 20 ஏக்கரும், சாத்தனூர் கிராமத்தில் 80 ஏக்கரும், போத்துளத்தொட்டி கிராமத்தில் 70 ஏக்கரும் வாங்கியுள்ளதாக நான் கூறுகிறேன், அந்த சொத்துக்களை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பெங்களூரில் எச்எஸ்ஆர் லேஅவுட்டிலும் , கொங்கனப்பள்ளியிலும் பல சொத்தக்கள் வாங்கியதாக கூறியுள்ளேன், அதையும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான், உறவினர்கள் கூறியதை வைத்து கூறுகிறேன். எந்த உறவினர்கள் அதை கூறினார்கள் என்றால் ஆவண எழுத்தர் கூறினார் ,அவர்கள் பெயர் என்னவென்றால் அவர்கள் பெயர் எனக்குத் தெரியவில்லை. முதல் பிரதிவாதி நல்லூர் கிராமத்தில் 30 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான், அதை அவர் மனைவி பெயரில் வாங்கியுள்ளார், நான் என் தந்தை பெயரில் உள்ள சொத்துக்களுக்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். முதல் பிரதிவாதி நல்லூர் கிராமத்தில் 30 ஏக்கர் நிலம் வாங்கியதாக நான் சொல்வது உண்மை என்றாலும், அந்த 30 ஏக்கர் நிலத்தில் தான் முதல் பிரதிவாதி என் தந்தை பெயரிலும் இடம் வாங்கினார் என்றாலும், அவர் பெயரில் உள்ள நிலமும் சேர்த்து தான் 30 ஏக்கர் என்று சொன்னால் சரியல்ல.

**முதல் பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

E SASIKALA

Principal Subordinate Judge,
Digitally signed by E SASIKALA
Location: Hosur
Date: 2022.07.28 18:49:36 +0530